## சார்பு நீதிமன்றம், அவிநாசி

**M.C.O.P.No.78/2018**
**C/W**
**M.C.O.P.No.81/2018**

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | பிரகாஷ் | வயது. | 28 |
| த.பெ. | பழனி | தொழில். | |
| முகவரி. | தண்டுக்காரம்பாளையம், அவிநாசி | | |

### ம.சா.1, முதல் விசாரணை

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன். முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1, பார்வை மகஜர் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2, மாதிரி வரைப்படம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3, காயச்சான்று சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கார் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5, மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை பைக் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6, குற்ற அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.7, மருத்துவ குறிப்புகள் ம.சா.ஆ.8, மருந்து மற்றும் மருத்துவமனை பில்கள் ரூ.94,350/- ம.சா.ஆ.9, எக்ஸ்ரே (எண்ணிக்கை-12) ம.சா.ஆ.10, வெளியேற்றுக்குறிப்பு ம.சா.ஆ.11-ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

### குறுக்கு விசாரணை

விபத்து குறித்து நான் தான் புகார் கொடுத்தேன். இரு சக்கர வாகனத்தை வினோத் ஓட்டினார். நாங்கள் 3 பேர் அந்த வாகனத்தில் சென்றோம். எனக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் விபத்து ஏற்படும்போது ஓட்டுநர் உரிமம் இல்லை. கிருஷ்ணமூர்த்தி இழப்பீடு கேட்டு திருப்பூர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 3 நபர்கள் அமர்ந்து சென்றதால் வாகனத்தை கட்டுப்படுத்த முடியாமல் வினோத்குமார் தான் விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. வினோத்குமாருக்கு ஓட்டுநர் உரிமம் அப்போது இல்லை என்றால் அவருக்கு LLR

இருந்தது. விபத்திற்கு 18 நாட்களுக்கு முன்பு LLR காலாவதி ஆகிவிட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இருசக்கர வாகனத்தில் 3 நபர்கள் பயணம் செய்வது தவறு என்றால் சரிதான். விபத்திக்கு வினோத்குமார் கூட்டுப்பொறுப்பாளர் ஆவார் என்றால் சரியல்ல. நான் புகாரில் விபத்து சமயத்தில் கம்பெனியில் டெய்லராக வேலை செய்வதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது மனுவிலும், முதல் விசாரணையிலும் Driver - ஆக வேலை செய்வதாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது அதை என்னால் ஆஜர்படுத்த முடியும்.

குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- பிரகாஷ்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.

<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>
**M.C.O.P.No.78/2018**
**C/W**
**M.C.O.P.No.81/2018**

2022 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி Thiru.K.Suresh Kumar, B.A.,B.L., அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர். | கருப்பன் | வயது. | 48 |
| த.பெ. | கருப்பன் | தொழில். | |
| முகவரி. | தண்டுக்காரம்பாளையம், அவிநாசி வட்டம் | | |

<u>ம.சா.2, முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவில் தரப்பு 2 ம் சாட்சி மனுதாரர். எனது முதல் விசாரணைக்கு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்கிறேன். எனது மகன் வினோத்குமாரின் சடலக்கூறாய்வு அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.12, எனது மகன் வினோத்குமாரின் இறப்பு சான்று இணையத்தள நகல் ம.சா.ஆ.13, எனது மகன் வினோத்குமாரரின் வாரிசு சான்று இணையதள நகல் ம.சா.ஆ.14, பிரேத விசாரணை அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.15, ஓட்டுநர் பழகுனர் உரிமம் நகல் ம.சா.ஆ.16 மற்றும் எனது ஆதார் அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட ஆவணம்) ம.சா.ஆ.17 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். யார் புகார் கொடுத்தார்கள் என்று தற்போது பெயர் நினைவில்லை. என் அண்ணன் மகன் பிரகாஷ் புகார் கொடுத்தார். மகன் இறந்த அதிர்ச்சியில் எனக்கு நினைவில்லை. என் மகனுடன் எத்தனை நபர்கள் இரு சக்கர வாகனத்தில் சென்றார்கள் என்று தற்போது தெரியாது. புகாரில் 3 நபர்கள் வாகனத்தில் சென்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் மகன் ஒட்டிசென்ற இரு சக்கர வாகனத்தின் இன்சூரன்ஸ் கம்பெனியை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான். என் மகனோ அல்லது இருசக்கர வாகனத்தில் அவருடன் பயணம் செய்த யாரும் தலை கவசம் அணிந்ததாக என்னுடைய மனுவிலும், விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் அது பற்றி தெரியாது. என்னுடைய மகன் முறையான ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் 3 நபர்கள் ஓட்டியதாலும்

தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது அதை நான் தாக்கல் செய்துள்ளேன். அது பழகுநர் ஓட்டுநர் உரிமம் என்றால் சரிதான். முறையாக ஓட்டுநர் உரிமம் உள்ள நபருடன் தான் பழகுநர் ஓட்டுநர் உரிமம் உள்ளவர்கள் வாகனத்தை இயக்க முடியும் என்றால் சரிதான். என் மகன் பனியன் கம்பெனியில் Production Manager -ஆக பணி புரிந்து மாதம் ரூ.14 ஆயிரம் ஊதியம் பெற்றதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுவில் குறிப்பிட்டவாறு ஒரு கம்பெனி இல்லை என்றால் சரியல்ல. என் மகன் அவ்வாறு ரூ.14 ஆயிரம் ஊதியம் பெறவில்லை என்றால் சரியல்ல. என் மகன் சிக்கண்ணா கல்லூரியில் Degree படித்துள்ளார். அதில் அவர் பிறந்த தேதி மற்றும் வயது உள்ளது. என் மகனின் தவறால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. சட்டப்படி அவருக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அதிகப்படியான இழப்பீடு வழக்கில் கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் எந்தவித இழப்பீடும் தரவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- கருப்பன்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.